1984 மார்ச் 29]

திரு. கு. பா. பழனியப்பன்: தலைவர் அவர்களே; பெரும் பாலான உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக் கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் பரனூரில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர் மானத்தை ஒவ்வொன்றாகத்தான் எடுத்துக்கொள்ளமுடியும். நீங்கள் முன்னிலைப் படுத்திக்கொண்டு, உங்களைப் பற்றிச் சொல் வது சரியல்ல. அவ்வாறு சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. எல்லோரும் கொடுத்திருக்கும் பொழுது, நீங்கள் 'நான் தான் முக்கியம்' என்று காட்டுவது சரியல்ல. இது எல்லோருடைய உரிமையையும் பாதிப்பதுபோல் ஆகும். இதை முன்மாதிரியாக செய்வது முறையல்ல.

(இ) விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர் உண்ணா விரதம் இருப்பது.

திரு. கு. ரமணி: கனம் சபாநாயகர் அவர்களே, நேற்றைய தினம்தான் விவசாயக் கல்லூரி மாணவர்கள் 2,000 பேர் உண்ணா விரதம் இருந்ததுபற்றிப் பேசினோம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்து அது பற்றி பேசினோம். அப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் இதமான பதிலைச் சொன்னார்கள். அவர் களைக் கூப்பிட்டுப் பேசுவோம் என்று பதில் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு செய்தி மிகவும் மோசமாக வந்திருக் கிறது.............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அரை மணி நேரம் பேசியிருக்கிறீர்கள், கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கள்.

(முற்பகல் 10-00)

திரு. கு. ரமணி: இன்றைக்கு இரண்டு கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று எல்லாக் கட்சிக் காரர்களும் கேட்டீர்கள். காங்கிரஸ் கட்சி கேட்டார்கள், திரா விட முன்னேற்றக் கழகக் கட்சி கேட்டார்கள். இப்படி எல் லோரும் கேட்டார்கள். (குறுக்கீடுகள்) அதைக் கேட்டுச் சொல் கிறேன்.

திரு. கு. ரமணி: நான் கட்சிகள் கேட்டதைச் சொல்ல வில்லை. நேற்றைக்கு அமைச்சர் அவர்கள் சொன்னதை அமல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனவே விரை வில் பேச்சுவார்த்தை நடத்தி, சுமூகமான சூழ்நிலையை ஏற் படுத்துவார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேட்டுச் சொல்கிறேன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமைகள் பற்றி நேற்று இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தில் கூட, மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், தங்கள் கருத்துக்களை வலியுறுத்துகின்ற வகையில் மேற்கொண்டு உண்ணாவிரதம் இருக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். கோவையிலும், மதுரையிலும், என்னுடைய குழந்தையும் கூட சாகும் வரை மற்றவர்களோடு சேர்ந்து உண்ணாவிரதம் இருப்பதாகத் தகவல் அந்த மாணவர்கள் எல்லோரும் இப்போது மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. எனவே சம்பந்தப்பட்ட மாணவர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசமுடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேளாண்மைத் துறை அமைச்சரைக் கேட்டுக் சொல்கிறேன்.

(ஈ) ராமபிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை மீது விவாதம் குறித்து.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நிகழ்ச்சி நிரலை 30 நாட்களுக்கு தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள், பிறகு தேவைப்பட்டால், எடுத்துக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ராம்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கையின் மீதான விவாதத்திற்கு ஒரு நாள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லிவிட்டு............(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கட்சித் தலைவரிடம் சொல்லி, அலுவல் ஆய்வுக் குழுவில் இதைப்பற்றி பேசச் சொல்லுங்கள். அப்போது அதைப்பற்றிப் பேசி, முடிவு எடுக்கலாம்.

3. ஒழுங்குப் பிரச்சினை.

அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லாதபோது அவர் கொடுத்துள்ள கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம். டாக்டர் சமரசம் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவையில் இல்லை. என்றாலும், அதற்கான பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லலாம்.

TRUTH ALONE TRIUMPHS